**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 85/2006**

Deposition of **P.W.-3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench clerk of this court, on 14.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவேல் | Father's Name | : வெள்ளையன் |
| Village | : முல்லைவாடி | Taluk | : ஆத்தூர் |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர், | Age | : 39 |

துவக்க நேரம் : 01.18 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பபட்டார்.

**வாதி தரப்பில் முதல் விசாரணை** : நான் தற்பொழுது முல்லைவாடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நகர சர்வே எண். 105, Ward-A, Block – 28 தொடர்பான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். டவுன் சர்வே எண். 105-ற்குண்டான நில அளவை பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **Ex.X1**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின்படி நகர சர்வே எண்.105-ற்கான பழைய சர்வே எண்.413/15 ப (பகுதி) ஆகும். மேற்படி இடம் யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் ஆயிரம் படையாட்சி மகன் நல்லமுத்து படையாட்சி மகன் பெயரில் பதிவாகியுள்ளது.

2. நகர ச.எண். 105, பழைய ச.எண்.413/15 ப-ற்கான கணினி சிட்டாவின் கணினி பதிவிறக்க நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **Ex.X2**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண்ணிற்கான புல வரைப்படத்தின் உண்மை நகலை

தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் **<u>Ex.X3</u>** – ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இடத்திற்குண்டான பட்டா யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் தங்கவேல் மகன் ராஜா, முத்துசாமி மனைவி பாப்பாத்தி என்கிற கலா, தங்கவேல் ஜோசப் மகள் உதயராணி, சுப்புராய படையாட்சி மகன் ராஜேந்திரன், ராஜேந்திரன் மனைவி சிவகாமி ஆகியோர்கள் பெயரில் கூட்டாக பதிவாகியுள்ளது. மேற்படி இடத்தை அழைப்பாணை கிடைக்கப்பெற்று பின்னர் நேரில் சென்று பார்வையிட்டேன். தாவா சொத்தில் கிணறு இருந்ததா என்றால் வீட்டிற்குள் இருக்கிறதா என்று தெரியாது ஆனால் வீட்டிற்கு வெளியில் உள்ளது.

3. தாவா சொத்தின் மேற்கு புறத்தில் யாருடைய வீடு உள்ளது என்றால் ராஜேந்திரன் என்பவரது வீடு உள்ளது. வாதியின் வீட்டின் வாசல்படி எந்த திசையில் இருந்தது என்றால் கிழக்கு திசையில் இருந்தது. அதேபோல் ராஜேந்தின் வீட்டின் வாசல்படி எந்த திசையில் இருந்தது என்றால் மேற்கு திசையில் இருந்தது. ராஜேந்திரன் வீட்டிலிருந்து வாதி வீட்டின் பின்புறம் உள்ள நிலத்திற்கு எவ்வாறு வரவேண்டும் என்றால் ராஜேந்திரன் வீட்டிற்கு வடபுறத்திலும், தென்புறத்திலும் உள்ள தெருவின் வழியாக வரவேண்டும். பிரதிவாதியின் வீட்டிற்கும், வாதியின் வீட்டிற்கும் தென்புறத்தில் 3 அடி அகலத்தில் சந்து ஒன்று உள்ளது. மேற்படி சந்தின் வழியாக பிரதிவாதி ராஜேந்திரன் வாதியின் வீட்டிற்கு பின்புறத்தில் உள்ள காலியிடத்திற்கு வர இயலுமா என்றால் அந்த சந்து மேற்கு புறத்தில் அடைக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுங்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.40 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.85/2006, Dt.14.10.2025.